## 2018-19ம் கல்வி ஆண்டில்

# 31,000 மாணவர்கள் கல்வி சுற்றுலா சென்றனர்

## மெட்ரோ ரயில்வே அறிவிப்பு

சென்னை, பிப். 22: 2018-19ம் கல்வி ஆண்டில் சென்னை மெட்ரோ ரயிலில் 31,178 மாணவர்கள் கல்வி சுற்றுலா மேற்கொண்டுள்ளதாக நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.

மெட்ரோ ரயில் நிலையங்கள் மற்றும் ரயில்களில் உள்ள வசதிகள், தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு மாதமும் மெட்ரோ ரயில் நிறுவனம் கல்வி சுற்றுலாவை ஏற்பாடு செய்து வருகிறது.

அதன்படி, சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை வழித்தடத்திலும், வண்ணாரப்பேட்டையில் இருந்து டி.எம்.எஸ் வழியாக விமானநிலையம் வரையிலான வழித்தடத்திலும் மாணவர்கள் அழைத்து செல்லப்படுவார்கள்.



அப்போது, மெட்ரோ ரயிலின் சிறப்பம்சங்கள் குறித்து மாணவ, மாணவியருக்கு அதிகாரிகள் எடுத்துரைப்பார்கள். இதில், சென்னையில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகள் மட்டுமின்றி திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இந்நிலையில், கடந்த 2018-19ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31,178 மாணவ, மாணவியர் மெட்ரோ ரயிலில் கல்வி சுற்றுலா மேற்கொண்டுள்ளனர். இதேபோல், 2019-20ம் ஆண்டிற்கான கல்விப்பயணம் ஜூன் 4 முதல் தொடங்கியுள்ளது. 2019 நவம்பர், டிசம்பர் மற்றும் 2020 ஜனவரி மாதங்களில் மொத்தம் 4,205 மாணவ, மாணவியர் கல்விப்பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், ஜூன் 2019 முதல் ஜனவரி 2020 வரை மொத்தம் 24,400 மாணவர்கள் பயணம் செய்துள்ளனர். தொடர்ந்து பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மெட்ரோ ரயிலில் கல்விப்பயணம் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.